**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 178/2017**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 07–ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.08.2023 | கணவர் பெயர்: | செல்வராஜ் |
| பெயர்: | விஜயலெட்சுமி<br>(PW1 chief continuation) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 60 /2023 |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை தொடர்ச்சி : 07.08.2023**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

04.05.1946 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து எனது தாத்தா பெயரில் ஏற்பட்ட கிரய சாசனத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ( பிரதிவாதி தரப்பில் அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும், அதற்கான காரணமும் விசாரணை வாக்குமூலத்தில் தெரிவிக்கப்படவில்லை என ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது. )

மேற்படி ஆவணத்தை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.